சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி.27/2021

**PW 1 நாச்சாள்** 31.10.2025

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

விபத்தில் இறந்து போனது யார் என கேட்டால் எனது மகன். இறந்து போன எனது மகனுக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது மகன் ஓட்டி சென்ற வாகனத்திற்கு பதிவு சான்று இல்லை என சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மசாஆ 6 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் எனது மகனின் ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யவில்லை என கண்டுள்ளது என்றால் சரிதான். இறந்து போன எனது மகன் ஓட்டி சென்ற வாகனம் யாருடையது என்று கேட்டால் என்னுடைய கணவருடையது. இறந்து போன எனது மகனுக்கு விபத்து சமயத்தில் எந்த வேலையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல, அவர் கூலி வேலை செய்தார். வருமானத்திற்குரிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அவர் எந்த வேலையும் செய்யாமல் இருந்து வந்தார் என்றால் சரியல்ல. இறந்து போன எனது மகனுக்கு தலையிலும், முகத்திலும் அடிபட்டு இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது மகன் தலைகவசம் அணியாத காரணத்தினால் அவர் தலையில் அடிபட்டு இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது மகனுக்கு இருசக்கர வாகனம் ஓட்ட தெரியாது என்றும், அவர் கவனக்குறைவாக ஓட்டி திடிரென்று வாகனத்தை ஓட்டியதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கு எனது மகன் தான் காரணம் என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு மிகவும் அதிகம் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி

பொள்ளாச்சி